# கொழும்பில் கைதானபல தமிழரை காணவில்லை?


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 4 இதழ் 215

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20—9—1993


(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கைது செய்யப்பட்ட பல தமிழ் இளைஞர்கள் காணமல் போயிருப்பதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல தமிழ் இளைஞர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து படையினரால் பிடித்துச் செல்லப்பட்டபோதும் பின் அவர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லையாம்.

சிலர் குற்றப் புலனாய்வு பிரிவினரின் மிக மோசமான சித்திரவதைக் குட்படுத்தப் பட்டதால் உளவியல் ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. நாலாம் மாடி சித்திரவதை பெருமளவில் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தொடர்ந்தும் தலைநகரில் பல தமிழர் கைது

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து விடுமுறைகளுக்காக இலங்கை வந்த பல தமிழ் இளைஞர்களும் கொழும்பில் கடந்த சில வாரங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதியை சேர்ந்த பல இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கைது செய்யப்பட்ட பல தமிழர் ஆயிரக்கணக்கில் பணம் செலுத்தி தப்பி வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பணம் பறிக்கும் முயற்சியில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனராம் (இ)

## ● முல்லைத்தீவுப் பகுதியில்

# புக்காரா அகோர தாக்குதல்

# 13 பேர் உடல்சிதறிப் பலி

## 40 பேர் காயம்

## கலைநிகழ்வில் நடந்த கொடூரம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு புக்காரா விமானங்கள் பொதுமக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான ரொக்கட் தாக்குதலில் 13 பொதுமக்கள் அந்த இடத்திலேயே உடல்சிதறிப் பலியானார்கள். 40 பேர் படுகாயம் அடைந்தனர். பலரது நிலை கவலைக்கிடமாயுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5-30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்தளன் கிராமத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த நிகழ்வு ஒன்றின்போது ஹெலிகப்டர் ஒன்றும் புக்காரா விமானம் ஒன்றும் அந்தப் பகுதிக்கு வந்தன. ஹெலிகப்டர் அந்தப் பகுதியை வட்டமிட புக்காரா விமானம் குண்டு வீச்சை நடாத்தியது. இதனையடுத்து இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென மீண்டும் அப்பகுதிக்கு வந்த புக்காரா விமா

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றுகடற்புலிகள் முல்லையில் வீரச்சாவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சின்போது விடுதலைப்புலிப் போராளிகள் மூவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது கண்ணிவெடி தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பலாந்துறைப் பகுதியில் முகாம் ஒன்றில் குளித்துக்கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் அம்பலாந்துறை முகாமுக்கு அருகேயுள்ள வடிகாய்ச்சி என்ற

(4-ம் பக்கம் பார்க்க)

## 10,000 படையினர் உதவியுடன் புலிகளுக்கு எதிராக போர்!

(கொழும்பு

இலங்கை இராணுவத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பத்தாயிரம் இராணுவத்தினரும் அடுத்த சில மாதங்களில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுவார்கள் என இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் இனப்பிரச்னை இங்கே பயங்கரவாதப் பிரச்னையே உள்ளதாக ஜனாதிபதி கூறியிருப்பதன் மூலம் அவர் படையினருக்கு தெளிவான கருத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

## சிலாபத்தில் இராணுவ தளம் அமெரிக்கா முயல்கிறதாம்!

(கொழும்பு).

சிலாபம் இரணவில பகுதியில் அமெரிக்காவின் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் அமைக்கும் திட்டம்மூலம் அமெரிக்கா தங்கள் கிராமத்தில் ராணுவ தளமொன்றை அமைக்க திட்டமிடுவதாக இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டத்தை எதிர்த்து நேற்று முன்தினம் இப்பகுதியில் பல இனமதத்தை சேர்ந்த சுமார் 20,000 பொது மக்கள் எதிர்ப்பு ஊர்வலத்தை நடாத்திய போதே அவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## வாந்திபேதி நோய் தீவிரமாகப் பரவுகிறது

### 20 பேர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வாந்திபேதி நோய் மிக வேகமாக பரவி வருகிறது. இந்நோயின் பாதிப்புக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் பலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுவரை யாழ் ஆஸ்பத்திரியில் சிறுவர், இளைஞர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு நிகழ்வு சிறப்பாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

லெப். கேணல் தியாகி திலீபனின் 6-ம் ஆண்டு நிகழ்வின் 5-ம் நாள் நிகழ்வுகள் தமிழ் ஈழம் எங்கும் நேற்று உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

(4-ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க தூதர் முற்றாக மறுப்பு

(கொழும்பு)

இரணவிலவில் அமெரிக்கா வினால் ஏற்படுத்தப்படும் வானொலி நிலையம் இராணுவ நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படும் என்று கூறப்படும் கருத்தை இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் மறுத்துள்ளார்.

இரணவில 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' வானொலி நிலையத்தின் நோக்கம் பற்றி பிரதி தூதுவர் திரு மான் மேலும் விபரிக்கையில், இந்த வானொலி நிலையம் அமைப்பதினால் ஏற்படும் அச்சங்கள் ஆதாரமற்றவை. இந்த எதிர்ப்பு நட

(4-ம் பக்கம் பார்க்க)

## 5000 அரச ஊழியர்களுக்கு அடுத்த வருடம் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவையில் உள்ள காசாளர்கள், கணக்கு வைப்பாளர்கள் களஞ்சியப் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு 'அடுத்த வருடம் தை மாதம் முதல் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

இப்பதவி உயர்வின் மூலம் சுமார் 5 ஆயிரம் ஊழியர்கள் பயனடையவுள்ளதாகவும் 65 வீதமான பதவி உயர்வு

(4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமாதிரி நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். பீ. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி- 466)

### தேவை

அழகு சாதன நிலையத்தில் பணிபுரிய ஆர்வமுள்ள 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: கி-472 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (கி-472)

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் ஒரு வயது நிரம்பிய நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 177 A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (கி-471)

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், விவா போத்தல்கள் மூடியுடனும், ஜாம் சோஸ்பிளேர் மற்றும் வேடியல் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- ரேஸ்ற் லைன் இன்டஸ்றீஸ், (தனி) லிமிட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஏ-3416)

### சில்வா வாச் வேக்ஸ்

தொண்ணூற்றொன்று தொண்ணூற்றி இரண்டாம் ஆண்டுகளில் எம்மிடம் மணிக்கூடுகள் திருத்தக் கொடுத்தவர்கள் ரசீதுகள் தொலைத்திருந்தால், போட்டோபிரதி உதிரிப்பாகங்களுக்கு மட்டும் பணம் செலுத்தி உங்கள் மணிக்கூடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். சில்வா வாச் வேக்ஸ், அன்லை வேலாயுகண்ணி, 15, 1-ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3412)

### ஆங்கில வைத்திய சேவை

ஆண், பெண், குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல்கள், வாதங்கள், வயிற்று நோய்கள், வாய்ப்புண், தோல்புரை நோய்கள், மாதவிடாய் பிரச்சனைகள், இருமல், மூலவியாதி, வீரியக்குறைவு, மற்றும் பல குணப்படாதநோய்கள் குணப்படுத்தப்படும். இளைப்பாறிய வைத்திய கலாநிதி த. விஸ்வநாதன் M. R. S. H. (லண்டன்) டொக்டர் பதிவு இல:-529, சண்டிலிப்பாய் (உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் சமீபமாக) சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (கி-462)

## கல்வி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாசமகா வித்தியாலய கல்விக் கண்காட்சி அண்மையில் இப்பாடசாலையில் நடைபெற்றது.

இக்கண்காட்சியை பாடசாலை அதிபர் செ. குபேரநாதன் ஆரம்பித்து வைத்தார். பாடசாலை ஆசிரியர்களான திரு. ஏ. குணசேகரம், திரு. இ. சிறீதரன் ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கற்றல், கற்பித்தல் முறைமையில் மாணவர்களிடையே இக்கண்காட்சி உற்சாகமூட்டி பலரது பாராட்டையும் பெற்றது. -சே

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயப் பரிசளிப்பு விழா, இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அதிபர் திரு. செ. குபேரநாதன் தலைமையில் பாடசாலை வெளியரங்கில் நடைபெறும்.

விழாவின் பிரதம விருந்தினராகப் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. துரைசிங்கம் கலந்துகொள்வார். -கி

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஏழாலை கொத்தணியால் இன்று 20ம் திகதி திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் ஏழாலை மகா வித்தியாலய மண்டபத்தில் 'ஆணி வேர்' நூல் வெளியீட்டு விழா இடம் பெறவுள்ளது.

திரு. ஞ. சூரியகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நூல்வெளியீட்டு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இன்பன் மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்புப் பொறுப்பாளர்கள் பங்கு கொள்கின்றனர். (ம

## ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாளை 21ம் திகதி வல்லிபுர ஆழ்வார் வெளிவீதி உலாத் திருவிழா ஆரம்பமாகும்.

22ம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனத் திருவிழா 23ம் திகதி திருவெண்ணெய் திருவிழா. 24ம் திகதி துகில் திருவிழாவும், 25ம் திகதி பாம்புத்திருவிழாவும், 26ம் திகதி மகாகம்சன போர்த் திருவிழாவும், 27ம் திகதி வேட்டைத் திருவிழாவும், 28ம் திகதி சப்பறத் திருவிழாவும், 29ம் திகதி எம்பெருமானின் ரதோற்சவமும், 30ம் திகதி கடல்தீர்த்த உற்சவமும், அக்டோபர் 1ம் திகதி பட்டுத் தீர்த்த உற்சவமும் கொடி இறக்கமும் நடைபெறும். அக்டோபர் 2ம் திகதி ஆஞ்சநேயர் மடையுடன் வருடாந்த மகோற்சவம் முடிவடையும். (52)

## வேலை வாய்ப்பு

### விற்பனை பிரதிநிதி

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரரிடமிருந்து பின்வரும் தகைமைகளை எதிர்பார்க்கின்றோம்.

(1) ஆகக்கூடியது 24 வயது

(2) கல்வித்தகைமை: க. பொ. த. (உ/த)ல் மூன்று பாடங்களில் சித்தி

(3) சுறுசுறுப்பாக செயற்படக்கூடியவராக இருக்க வேண்டும்.

வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

இரு சிபார்சு செய்யக்கூடியவர்களின் பெயர்களுடன் கூடிய சுய விபரங்களுடன் 27-9-93 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக முகாமையாளர்
ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்டட்
14, சீனியர் லேன்
யாழ்ப்பாணம்.

(ஏ3430)

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதாரத் திணைக்களம்

### பகிரங்க ஏலவிற்பனை

எனது பணிமனையிலுள்ள கீழ்க்காணும் பழுதடைந்த பொருட்கள் 28-09-93-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலவிற்பனையில் பொருட்களை எடுப்பவர் உடனே பணத்தைச் செலுத்தி அன்றே பொருட்களை அப்புறப்படுத்தவேண்டும். பொருட்களை பார்வையிட விரும்புவோர் 24-09-93, 27-09-93 ஆகிய திகதிகளில் வேலை நேரத்தில் எனது பணிமனையில் பார்வையிடலாம்.

| | | |
|---|---|---|
| 1. | றெனோல்ட் கார் | — 01 |
| 2. | தட்டச்சு இயந்திரம் ஆங்கிலம் | — 04 |
| 3. | பித்தளைக் குமிழ் (Tab) | — 01 |
| 4. | குளிர்சாதனப்பெட்டி | — 03 |

வைத்தியகலாநிதி க. தா. சிவபாதம்,
பிராந்திய தொற்று நோயியலாளர்,
பிராந்திய பணிப்பாளருக்காக.

சுகாதார சேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
59, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-3426)

## தியாகி திலீபன் ஆறுவது நினைவுதின நிகழ்வுகள்

(மானிப்பாய்)

தியாகி திலீபனின் 6-வது ஆண்டு நினைவையொட்டி ஆனைக்கோட்டையில் மானிப்பாய் பிரதேச மக்களால் கடந்த 15-ம் திகதி முதல் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### மாணவர் உண்ணாவிரதம்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய வீதியில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான பந்தலில் திலீபனின் உருவப் படம் வைக்கப்பட்டு மக்களினால் அஞ்சலி செலுத்தப் பட்டு வருவதுடன் அப்பகுதி பாடசாலை மாணவ, மாணவிகளும், பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் இவ்வுண்ணாவிரதத்தில் பங்குபற்றி வருகின்றனர்.

### மக்கள் அஞ்சலி

நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளிலுள்ள முக்கிய சந்திகள், பொது இடங்கள் மற்றும் ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் திலீபனின் உருவப்படத்தினை வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தி வருவதுடன் வாழை தோரணம், சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டும் உள்ளது. (71)

### மலர் அஞ்சலி

(அரியாலை)

யாழ். முலவைச் சந்தி-யாழ் ஸ்ரேசன் சந்தி, யாழ். புகையிரத நிலையம், யாழ். திருவள்ளுவர் சனசமூகநிலைய முன்றல் ஆகியவற்றில் பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர், தீப, அஞ்சலிகள் செலுத்தப்பட்டு வருகின்றது. (59)

### ப. நோ. கூ. ச. அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் திலீபனின் திருவுருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றன.

இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களிலும் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகின்றது (72)

### பாடசாலைகள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் ஆறுவது நினைவுதினத்தையொட்டி பல கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் அவரது திருஉருவப் படத்துக்கு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு ஞாபகார்த்தப் பேருரைகளும் நிகழ்த்தப்பட்டன.

தியாகி திலீபனின் நினைவாக அங்கு எல்லா இடங்களிலும் சிரமதானப் பணிகள் பரந்தளவில் நடைபெறுகின்றன. (162)

### அடையாள உண்ணாவிரதம்

(அரியாலை)

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடக்கும் அடையாள உண்ணாவிரதத்தில் யாழ். புனித. சாள்ஸ் மகா வித்தியாலயம், புனித. பத்திரிஸ் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடக் கல்லூரி, யூனியன் குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள் ஊர்காவற்றுறை. வேலணை கொத்தணிப் பாடசாலைகள் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். (59)

### உண்ணாவிரதம்

(உடுவில்)

தியாகி திலீபனின் ஆறுவது ஆண்டு நினைவையொட்டி உடுவில் தெல்லிப்பழை மக்கள் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் வீதியில் பந்தல் அமைத்து உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்

தியாகி திலீபன் ஞாபகார்த்த உண்ணாவிரத நிகழ்வினை உடுவில் வட்ட செயலக அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ஒப்பில் அறிவன் நினைவுச்சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தார். தேசியக் கொடியை திரு வே... ஏற்றி வைத்தார். (59)

### வலி. மேற்கில் அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

தியாகி திலீபனின் 6ம் ஆண்டு நினைவை முன்னிட்டு வலி. மேற்குப் பகுதியில் சந்திகள் தோறும் திலீபனின் திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப் பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டு வருகின்றது.

ஒலிபெருக்கிகளில் திலீபனின் சொற்பொழிவுகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலும் வீடுகளின் முன்றலிலும் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மங்கல விளக்கேற்றப்பட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டுள்ளது (72)

### வரலாற்றுக் குறிப்புகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள் சிற்றூர்திச் சேவைச் சங்கங்களினால் யாழ். மத்திய பஸ் நிலையம், மூளாய் பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணிச் சந்தி, சுன்னாகம், அச்சுவேலி, வல்வெட்டித்துறை, நெல்லியடி, மருதங்கேணி சாவகச்சேரி ஆகிய பஸ் நிலையங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

### அல்வாயில் உண்ணாவிரதம்

(நெல்லியடி)

லெப். கேணல் தியாகி திலீபனின் 6-வது வருட நினைவை முன்னிட்டு வடமராட்சிக் கோட்ட மட்டத்தில் அல்வாய் அம்மன் ஆலய முன்றலில் உண்ணாநோன்பு நடைபெற்றது

வடமராட்சி மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி காகிணை தேசியக் கொடியையும், ஈவைச்சுடரை பருத்தித்துறை வட்டவைப் பொறுப்பாளர் திரு. கண்ணதாசனும் ஏற்றி வைத்தார்கள். (160)

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள லெப். கேணல் தியாகி திலீபனின் வரலாற்றுக் கண்காட்சி நிகழ்வினைப் பெருமளவு மக்கள் பார்வையிடுகின்றனர். காலை முதல் மாலை வரை திறந்து வைக்கப்பட்டுள்ள இக்காட்சி நிகழ்வானது தியாகி திலீபனின் வரலாற்றுக் குறிப்புகளை கொண்டமைந்துள்ளது.

தியாகி திலீபனின் பிறப்புச் சான்றிதழ் முதல் அவரது இறுதி ஊர்வலம் வரையான அனைத்து அம்சங்கள் இக் கண்காட்சியில் அடங்கியுள்ளன. இக்கண்காட்சியில் தியாகி திலீபனது வரலாற்று நிகழ்வுகளின் புகைப்படங்கள் துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றுடன் பத்திரிகை குறிப்புகளும் அடங்கியுள்ளன. (158)

### மணிவாக்கு

உன்னிடம் இருப்பவற்றில் சிறந்ததை நாட்டுக்குக் கொடு. உயர்ந்தது உனக்கு திரும்ப வந்து சேரும்.

—மேடலின் பிரிட்ஜஸ்

## நமது நோக்கு

## சொந்த 'மா' வேண்டாமா?

இம்முறை குரக்கன் செய்கையானது மிகக் கூடிய விளைச்சலைக் கொடுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது கோதுமை மா இறக்குமதியானது. மக்கள் அந்த மாவிற்கு அடிமையானார்கள்!

சொந்த நாட்டிலேயே, உணவு உற்பத்திக்கான வளமிருந்தும், அந்த வளங்களைத் தக்கமுறையில் பயன்படுத்திச் சொந்த மா உற்பத்தியில் கவனம் குறைந்துவிட்டது.

சிறுதானியச் செய்கை கைவிடப்பட்டதினால், அவற்றின் போசாக்குத் திறன் பற்றியும் அவற்றை எவ்வாறு நாளாந்த உணவில் சேர்க்கலாம் என்பது பற்றியும் மக்கள் மறந்துவிட்டார்கள். சொந்த 'மா' பற்றிய மனப்போக்கும் மாறிவிட்டது.

இன்று— மீண்டும் குரக்கன் போன்ற சிறு தானிய உற்பத்திக்கு ஊக்கம் கொடுப்பது வரவேற்கத் தக்கதே!

குரக்கன் சத்துள்ள சிறு தானியம்; சலரோகம் போன்ற பலவகை நோயாளிகளுக்கும் ஏற்ற உணவாகச் சிபாரிசு செய்யப்படுகின்றது.

உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க, குரக்கனை நியாய விலையில் சந்தைப் படுத்துவதற்கான ஒழுங்குகளை, பெருந்தோட்ட மேம்பாட்டு நிறுவனம் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ளது.

உடல்நல நோக்கத்திற்காக மக்களின் நாளாந்த உணவுப் பழக்கங்கள் மாறவேண்டும்; மாற்றப்படவேண்டும்.

அதுமாத்திரமல்ல, எமது பகுதி மண்வளத்தினால் பெறப்படும் உணவு வகைகளை உருசியான கவர்ச்சிகரமான உணவுப் பண்டங்களாக ஆக்கும் முறைகள், சமுதாயத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

இதைச் செய்யவேண்டியவர்கள் யார்? பாடசாலை மட்டத்தில் மனையியற் கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், பாடத்திட்டம் என்ற குறுகிய வட்டத்திற்குள் நிற்காது, புதிய வகை உணவு வகைகளை ஊக்குவிக்கவேண்டும்.

இந்த வகையில், மனையியற் பொருட்காட்சிகளில், உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்துவது, சொந்த 'மா' பயன்படுத்துவது வரவேற்கத்தக்கதே!

## "எமது நாளாந்த வாழ்வுடன் பத்திரிகைகள் இணைந்து விட்டன"

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரை

(பண்டத்தரிப்பு)

"பத்திரிகைகள் இன்று எமது நாளாந்த வாழ்வுடன் இணைந்துவிட்டன. காலையில் கடைக்கு பாண்வாங்கச் செல்லும் பலர் தினசரிப்பத்திரிகையையும் வாங்கிவருவதையும் வீடுகளில் குடும்ப அங்கத்தவர்கள் அவற்றை போட்டிபோட்டுக்கொண்டு படிப்பதையும் சாதாரணமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளை நடாத்துவதில் வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்ற போதிலும் சிறிய அளவில் அவை வெளிவந்தாலும் நல்ல கட்டமைப்புடன் இறுக்கமான செய்திகளுடன் அவை வெளிவருகின்றன."

இவ்வாறு யாழ் பல்கலைக் கழகத்தில் புறநிலைப் படிப்புகள் அலகினால் ஒழுங்குசெய்யப்பட்ட பத்திரிகை பயிற்சி நெறி ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"பத்திரிகைத்துறை தமிழ் மொழியில் இன்னும் போதிய வளர்ச்சியை பெறவில்லை. யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு காலத்தின் தேவையை அறிந்து இந்தப் பத்திரிகை பயிற்சிநெறியை ஆரம்பித்துள்ளது. நல்ல பயனுள்ள ஆரம்பமுயற்சியாகும். யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை தற்போதைய சூழ்நிலைகளினால் பல நிறுவனங்கள், கடைகள் என்பன செயலிழந்துள்ளபோதிலும் அச்சகங்கள் இயங்கிக்கொண்டே இருக்கின்றதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. பல சஞ்சிகைகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வைபவத்திற்கு தலைமை வகித்த புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தமதுரையில் குறிப்பிட்டதாவது:

கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியக்குழு யாழ் பல்கலைக்கழகத்தில் புறநிலைப் படிப்புகள் அலகை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கிய உடனேயே இங்கு இது செயல்படத் தொடங்கியது. பல்கலைக்கழகத்திற்கும் சமுதாயத்திற்கும் மக்களுக்குமிடையில் தொடர்புகளை பலப்படுத்துவதற்கு இந்த கற்கைநெறிகள் பேருதவி செய்கின்றன. உலகின் பல்வேறு நாடுகளிலும் பல்கலைக்கழகங்களில் இதுபோன்ற கற்கைநெறிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன.

எமது யாழ் பல்கலைக்கழகத்தில் எதிர்காலத்தில் பத்திரிகைத் துறையிலும் பட்டம் பெறுவதற்கு பல்வேறு வசதிகள் செய்யப்படவுள்ளன. இவற்றை நன்கு பயன்படுத்திக்கொள்ள முற்படவேண்டும். பத்திரிகை தொடர்பான ஆராய்ச்சி கட்டுரைகள் கூட எழுதி பட்டம் பெறக்கூடியதாக இருக்கிறது.

ஈழநாடு ஆசிரியர் மு. சிவானந்தன், உதவி ஆசிரியர் கானமயில்நாதன், ஈழநாதம் ஆசிரியர் ஜெயராஜ் ஆகியோரும் உரையாற்றினார்கள். (72

### தியாகி திலீபன் நினைவு

## உண்ணாவிரதமும் சிரமதான பணியும்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேர்ணல் திலீபனின் 6வது ஆண்டு நினைவையொட்டி நாளை 21ம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள உண்ணாவிரதம் பற்றிய விபரம் வருமாறு:

**வலிகாமம் கோட்டம்:**

சங்கானை அரசடி வைரவர் கோவில், சங்கானை தெ. ப. பொ. சங்கம், கோப்பாய்— உரும்பராய் மக்கள், சண்டிலிப்பாய், முத்துவிநாயகர் கோவில் ஆனைக்கோட்டை, தெல்லி. ப.நோ.கூ.ச. அங்கத்தவர்கள், உடுவில்- தெல்லிப்பழை- கன்னாகம் சிவன் கோவில், ஏழாலை சிற்றூர் மக்கள், யாழ்ப்பாணம்- நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதி. நகைத்தொழிலாளர் சங்கம், நல்லூர்- நல்லூர் கந்தசுவாமி கோவில், கந்தர் மடம்- கோண்டாவில் மக்கள்.

**வடமராட்சிக் கோட்டம்:**

கரணவாய்- சமியன் அரசடி. தெல்லி. கிழ. நெல்லி. வர்த்தக சங்கம், நெல்லியடி வடக்கு, சிற்றூர் மக்கள், உடுப்பிட்டி- உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவில், இமையாணன் மக்கள், பருத்தித்துறை- அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி. பருத்தித்துறை தெற்கு மக்கள்.

**தென்மராட்சிக் கோட்டம்:**

பளை- பளை பிரதேச சபை முன், புலோப்பளை சிற்றூர் தும்பு ஆலை, கொடிகாமம்- புகையிரத நிலைய அருகாமை, கேடிலிஸ் நகர், உசன் சிக. ச. ச நிலை, நாவலர் ச. ச. நி. கோயிலாமனை மிருசுவில், அ.த.க.பாடசாலை, மீசாலை, வீரசிங்கம் ம. வித்தி, ரே.த.க.பாடசாலை, சாவகச்சேரி- மணம் குணப் பிள்ளையார் கோவில், சாவா நகர், மட்டு. சந்திரபுரம், கல்வயல், கைதடி, நுணாவில் தச்சு தொ. சங். மட்டு தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாசாலை. கைதடி- கைதடி சந்தி, மறவன்புலோ சிற. ஸ்ரீ முருகன் ச. ச.நி. தனங்கிளப்பு, தெற்கு மாதர் சங்கம், மறவன்புலோ சகல கலாவல்லி வீதி.

**தீவகக்கோட்டம்:**

நல்லூர் கோவில், டயஸ் குடியிருப்பு, வேலணை- கிழ. மகா வித்தி, சைவப்பிரகாச வித்தியாசாலை.

**சிரமதானம்**

**வலிகாமம் கோட்டம்:**

கோப்பாய்- கிருஷ்ணன் கோவில், மு. து. செ. முகாம் மக்கள், உடுவில்- தெல்லி- புன்னாலைக்கட்டுவன் வைத்தியசாலை துப்பரவு- மாணவர், நல்லூர் பலாலி வீதி துப்பரவு. கரவெட்டி- துன்னாலை மேற்கு பொது மயானம் துப்பரவு நிலைய உறுப்பினர். உடுப்பிட்டி- சனசமூக வீதி துப்பரவு, அரசடி வீதி, இமையாணன் மேற்கு மக்கள், பருத்தித்துறை- பொலி சந்தை- திக்கம் துப்பரவு-பொதுமக்கள்.

தீவகம்- சாம்சன் குடியிருப்பு- பாலம் புனரமைப்பு.

(உ)

### பரீட்சையில் சித்தியெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட 1993 ஜூலை எம். பி. பி. எஸ். இரண்டாவது பரீட்சையில் அதி திறமைச் சித்தியில் ஒருவரும் திறமைச்சித்தியில் 19 பேரும், சாதாரண சித்தியில் 7 பேரும் நூனசித்தியில் 20 பேருமாக சித்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(கே)

### சிற்றூர்தி சேவை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் போக்குவரத்து சங்கங்கள் அனைத்தும் இணைந்து யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இம்மாதம் 24-ந் திகதி வெள்ளிக்கிழமை லெப். கேணல் திலீபனின் 6-ம் ஆண்டு நினைவாக அடையாள உண்ணா நோன்பு அனுஷ்டிக்கவுள்ளதால் அன்றைய தினம் யாழ். மாவட்டத்திலுள்ள சிற்றூர்திகள் அனைத்தும் நாளாந்த சேவையில் ஈடுபடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. —இ

### தியாகி திலீபனின்

## வரலாற்றை சித்தரிக்கும் தேர்ப்பவனி, காவடி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணைப்பதினால் தியாகி திலீபனின் வரலாற்றை சித்தரிக்கும் காவடி நிகழ்வும் தேர்ப்பவனியும் தற்பொழுது நடாத்தப்பட்டுவருகிறது.

இன்று காலை 9 மணிக்கு சுன்னாகத்திலிருந்து ஆரம்பமாகும் இப்பவனி. மருதனார்மடம், இணுவில், தாவடி, கொக்குவில், தட்டாதெருச் சந்தி, கந்தர்மடம் சந்தி, திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன்சந்தி, பிற்பகல் 4 மணிக்கு கல்வியங்காட்டுச் சந்தியில் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதியூடாக அச்சுவேலி பஸ்நிலையத்தை சென்றடையும். இதுடன் இரவு 11 மணிக்கு அன்றைய நிகழ்வு நிறைவு பெறும்.

நாளை காலை 9 மணிக்கு நெல்லியடியிலிருந்து குஞ்சர்கடை, புருப்பொறுக்கி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, திக்கம், வதிரிசந்தி, நெல்லியடி, கலிகை, மந்திகை. பருத்தித்துறை, வல்லிபுரக் கோவிலுடன் அன்றைய நிகழ்வு இரவு 11 மணிக்கு நிறைவு பெறும்.

22ம் திகதி காலை நிகழ்ச்சி ஆரம்பமாகி வல்லிபுரக் கோவில், குடத்தனை, நாகர் கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி, தாளையடி. இத்துடன் அன்றைய நிகழ்வு இரவு 11 மணிக்கு நிறைவு பெறும். 23ம் திகதி காலை ஆரம்பமாகி கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, முத்திரைச் சந்தி ஊடாக யாழ். மத்திய பஸ்நிலையத்தை பிற்பகல் 4 மணிக்கு வந்தடையும். (சி)

### வேப்பம் விதையைச்சேர்த்து எண்ணெ வடித்திடுவோம்

## இன்று

(உடுவில்)

தியாகி திலீபனின் ஆறுவது ஆண்டு நினைவு நாளையொட்டி யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வைத்திய மத்திய மகாவித்தியாலயத்தில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஆலோசகர் தலைவர் திரு. நி. ஜனகன் தலைமையில் இவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபடுவர். —109

0 0 0

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் இன்று 20-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

29-ந் திகதி தேர்த்திருவிழாவும், 30-ந் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று அடுத்த நாள் பூங்காவனத்துடன் உற்சவம் நிறைவுறும். —க

0 0 0

(வட்டுக்கோட்டை)

யாழ் கல்வித் திணைக்களத்தினால் இவ்வாண்டும் "சகல கலாவல்லி மாலை" மனனப் போட்டி யாழ் மாவட்ட ரீதியில் 12-ம், 13-ம் ஆண்டு வகுப்பு மாணவர்களுக்கிடையே நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டி கொத்தணி ரீதியில் இன்று 20ம் திகதி திங்கட்கிழமையும் கோட்ட மட்டத்தில் 24ம் திகதியும், வெள்ளிக்கிழமையும் மாவட்ட மட்டத்தில் 39ம் திகதி வியாழக்கிழமையும் நடாத்தப்படவுள்ளன. (139)

## இராசிபலன்

20-09-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 4)

பஞ்சமி முன்னிரவு 10-17 வரை, விசாகம் முன்னிரவு 9-53 வரை, இராகுகாலம் காலை 7-32 முதல் 9-2 வரை, சுபநேரம் பகல் 12-2 முதல் 1-32 வரை, மரணயோகம்.

மேடம்: அதிகார மிரட்டல், கடமை தவறுதல், அலைச்சல்.

இடபம்: தாயார் உதவி, பணவரவு, காரியவெற்றி.

மிதுனம்: வரோதிபர் அறிவுரை, தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி.

கடகம்: வாக்குப்பகை, சகோதரர் மனஸ்தாபம், வெறுப்பு

சிங்கம்: தொழில் நஷ்டம், புறங்கூறல், யோசனை.

கன்னி: முயற்சி வெற்றி, நற்பணி, கற்பனை மிகுதி

துலாம்: துயருறும்செய்தி, பணமுடை, கருத்துமுரண்பாடு.

விருச்சிகம்: வாழ்க்கை வசதி, கல்வி மேம்பாடு, புகழ்.

தனுசு: மனக்குமுறல், எதிர்பாராத தொல்லை, குடும்பப்பிரிவு

மகரம்: எதிர்பார்த்த உதவி, மனைவி சந்தோஷம், விவாதம்.

கும்பம்: அதிக வருவாய், பழைய சிந்தனை, கலந்துரையாடல்.

மீனம்: ஏமாற்றம், எதிரியின் தொல்லை, குழப்பம்.

— ஜோஸ்யர்.

# பழனி, ராணிப்பேட்டையில் இன்று இடைத்தேர்தல்கள்!

## 23-ம் வாக்குகள் எண்ணப்படும்

(சென்னை)

தமிழகத்தின் பழனி நாடாளுமன்றத்தொகுதிக்கும் ராணிப்பேட்டை சட்ட சபைத் தொகுதிக்கும் இன்று இடைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இத்தேர்தலில் இ. காங்கிரஸ் கட்சி கூட்டணி எதுவுமில்லாமல் தனியாக போட்டியிடுகிறது. பழனி தொகுதியில் சுயேச்சை வேட்பாளர்கள் உட்பட 47 பேர் போட்டியிடுகின்றனர். ராணிப்பேட்டையில் பாட்டாளி மக்கள் கட்சியும், 25 சுயேச்சை வேட்பாளர்களும் இ காங்கிரஸ், அ. தி. மு. க., தி. மு. க. வுடன் போட்டியிடுகின்றன.

இவ்விரு தேர்தல்களிலும் இ. காங்கிரஸ், அ. தி. மு. க., தி. மு. க. ஆகிய மூன்று பிரதான கட்சிகளுக்கிடையிலும் கடும் போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலை முன்னிட்டு இத்தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் கட்சிகளுக்கிடையில் ஆங்காங்கே தேர்தல் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன.

இத்தொகுதியில் முகாமிட்டுள்ள அ. தி. மு. க. அமைச்சர்கள் தேர்தல் நடவடிக்கையில் குறுக்கிடுவதாகவும் அப்பகுதியில் அ. தி. மு. க. வைச் சேர்ந்த ஆட்கள் ஏராளமாக குவிக்கப்படுவதாகவும் காவல் துறையினரின் நடவடிக்கைகளை இவர்கள் கட்டுப்படுத்தி வருவதாகவும் தமக்கு புகார் கிடைத்துள்ளதாக ஆளுநர் திரு. சென்னாரெட்டி சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு தொகுதிகளினதும் வாக்குகள் எதிர்வரும் 23-ம் திகதி எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (பி-ஸி)

## கருணாநிதி விலகினால்தான் தி. மு. க. ஆட்சி அமைக்கும்

(சென்னை)

தி. மு. க.வின் தலைமைப் பொறுப்பிலிருந்து கருணாநிதி விலகி இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் எதிர்காலத்தில் தி. மு. க. நிச்சயமாக ஆட்சியைப் பிடிக்குமென்று நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ளார்.

தலைமைப் பதவியிலிருந்து கருணாநிதி தானாக இறங்காவிட்டால் என்றாவது அவரை பதவி இறக்கும்நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறுமென்றும் நாஞ்சில் மனோகரன் மேலும் கூறியுள்ளார்.

மதுரையில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையிலேயே திரு. மனோகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். (பி-ஸி)

## வெளிநாடுகளுக்கான பிரேமாவின் பயணச் செலவு

### நாடாளுமன்றில் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டதில் 23,333, 610. 25 ரூபா செலவாகியது என்று அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா கேட்ட கேள்விக்கே, அமைச்சர் விமல் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

1992-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 1993 பெப்ரவரி வரை இடம்பெற்ற பிரேமதாசவின் வெளிநாட்டுப் பயணத்தில் உல்லாசப் பிரயாண சபை அதிகாரிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், டாக்டர்கள், ரூபவாஹினி வானொலி ஊழியர்கள், படப்பிடிப்பாளர்கள், செய்தியாளர்கள் என்று 22 பேர் இந்த வெளிநாட்டு பிரயாணத்தை மேற்கொண்டிருந்தனர்.

1992ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாகிஸ்தானுக்கு சென்றபோது 57, 35, 561.13 ரூபாவும், 1992 ஒக்டோபர் மாதம் இந்தியா, பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டபோது 62,97 658 95 ரூபாவும், 1992 டிசம்பர் மாதம் சார்க் மகாநாட்டுக்கு பங்களாதேஷ் சென்றபோது 77,45,144.43 ரூபாவும் 1993 ஜனவரி மாதம் புத்தகாயாவுக்கு சென்றபோது 30,45,790.62 ரூபாவும் செலவழிக்கப்பட்டது என்றும் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-ஸி)

## மோட்டார் ஊர்திப் பதிவு ஆறும் கட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்திப்பதிவின் ஆறும் கட்டம் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படுவதாக மோட்டார் ஊர்தி பதிவுப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.

வடமராட்சியில் கரவெட்டி, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, மற்றும் தென்மராட்சியில், பளையைச்சேர்ந்தோர் தமது மோட்டார் ஊர்திகளை கோண்டாவில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப்பதிவுச் செயலகத்தில் கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணிவரையும் பதிவுக்குட்படுத்தலாம்.

அத்துடன் வடமராட்சிப் பகுதியை சேர்ந்தவர்களது மோட்டார் ஊர்திகள் வடமராட்சியில் அவசர அனுமதிச் செயலகங்களான, மாலுசந்தி உடுப்பிட்டி செயலகங்களிலும் தென்மராட்சி பளைப்பகுதியில் மோட்டார் ஊர்திகள் சாவகச்சேரி அவசர அனுமதிச் செயலகத்திலும் வைத்து பரிசோதனைக்குட்படுத்தப்படும். (சி)

## கைதடி சித்த மருத்துவத் துறைக்கு துணை வேந்தர் இன்று விஜயம் செய்வார்

(யாழ்ப்பாணம்)

கைதடியில் இயங்கும் சித்த மருத்துவத் துறைக்கு இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விஜயம் செய்து விரிவுரையாளர், மாணவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

சித்த மருத்துவ துறையை தனிப்பீடமாகக்கோரி நடைபெற்று வரும் பகிஷ்கரிப்பு தொடர்பாகவும் இன்று ஆராயப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. இன்றைய சந்திப்பை தொடர்ந்து தமது பகிஷ்கரிப்பை தொடர்வதா அல்லது கைவிடுவதா என்பது பற்றி முடிவு செய்யப்படுமென மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 25-ம் திகதி, சித்த மருத்துவ துறையை தனிப்பீடமாக்குவதா அல்லது நிறுவனமாக்குவதா என்பது பற்றி பல்கலைக்கழக பேரவையில் ஆராயப்படவுள்ளதாம். (ஸி)

## வெண்கட்டி, கரும்பலகை விநியோகிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு விநியோகிக்க வெண்கட்டி கரும்பலகை மை என்பன தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உதவியுடன் தருவிக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்களை கொள்விலையில் பாடசாலைகளுக்கு வழங்கவிருப்பதால் தேவையான பாடசாலை அதிபர் கொத்தணி அதிபர் ஊடாக தேவைக்கான விண்ணப்பங்களை 23-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன் கல்வித் திணைக்கள களஞ்சியப்பிரிவில் திரு. இ. கந்தையாவிடம் நேரடியாக சமர்ப்பிக்குமாறு: 27-ம் திகதி திங்கட்கிழமை மேற்படி பொருள்கள் விநியோகிக்கப்படும் போது பணம் செலுத்தியே பொருள் பெற வேண்டுமென கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (ஸி)

## விசாரணைக் கமிஷன் கோரி லலித் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டப்பேரணி

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலை பற்றி விசாரிப்பதற்கு ஒரு ஆணைக் குழுவை நியமிக்கக்கோரி அவரது கட்சியினர் பல இடங்களிலும் ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒருகட்டமாக இரத்மலானையில் ஆரம்பமாகும் இந்த ஆர்ப்பாட்டம் நாட்டின் பலபகுதிகளிலும் நடாத்துவதற்கு லலித் அத்துலத்முதலியின் அனுதாபிகள் ஆயத்தம் செய்து வருகின்றனர்.

## வெற்றி தோல்வி இல்லை

(கொழும்பு)

தென்ஆபிரிக்க- இலங்கை அணிகளுக்கிடையிலான 3வதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. காலநிலை சீரின்மையால் நேற்று இறுதிநாள் ஆட்டம் நடைபெறவில்லை.

### 5000 அரச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சேவைமூப்பு, திறமை அடிப்படையிலும் எஞ்சிய 35 வீதம் பதவி உயர்வுகள் போட்டி பரீட்சை மூலமும் வழங்கப்படும்.

ஏற்கனவே பொது எழுதுவினைஞர்கள் தட்டெழுத்தாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-ஸி)

### மூன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகளின் பொறியியல் பிரிவுப்பொறுப்பாளர் மேஜர் மூர்த்திமாஸ்டர் அல்லது சந்திரசேகரம் கிருஷ்ணமூர்த்தி- (பொலிகண்டி, வல்வெட்டித்துறை), கடற்புலி 2ம் லெப். விவேகன் (பொன்னன் கிருபாகரன்-[illegible]), வீரவேங்கை நவநீதன் (விஜயராசா - விஜயமோகனராசா- கிளிநொச்சி) ஆகிய மூன்று போராளிகளுமே வீரச்சாவை தழுவியவர்களாவர். (க-ஸி)

### 10,000 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியுள்ளார். இதற்கேற்ப படையினர் வடக்கு-கிழக்கில் தமது நடவடிக்கைகளை தொடர்வார்கள்.

பாதுகாப்பு அமைச்சராக லெ. ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நியமிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் வடக்கு - கிழக்கு போருக்கு விரைவில் முடிவு காணமுடியும். புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 10,000 இராணுவத்தினருக்குமான பயிற்சி டிசம்பர் மாதமுற்பகுதியில் முடிவடையும். இவர்கள் அனைவரும் உடனடியாக வடக்கு-கிழக்கு போர் முனைக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் தெரிவித்தார். (ஸி)

### திலீபன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள உண்ணாவிரதங்கள் பொதுப்பணிகள், கலை நிகழ்ச்சிகள், ஊர்தி பவனி, காவடி பவனி என்பன பல இடங்களிலும் நடைபெற்றன.

தியாகி திலீபனின் உண்ணாவிரத நிகழ்வுகள் வட்டார ரீதியாக பல இடங்களிலும் நடைபெற்றன.

வடமராட்சி மற்றும் அராலி நீர்வேலி, சுன்னாகம், சங்கானை, ஆனைக்கோட்டை, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற இடங்களிலும் அடையாள உண்ணாவிரதங்கள் பரவலாக நடைபெற்றன.

தியாகி திலீபனின் வீரவுரைகளும், விடுதலைக்கீதங்களும் தமிழ் ஈழம் எங்கும் நேற்று ஒலிபரப்பப்பட்டதைக் காணக்கூடியதாகவிருந்தது. (க-ஸி)

### படையினர் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் உள்ள குளம் ஒன்றில் குளித்துக் கொண்டிருந்த படையினரை நோக்கியே விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடாத்தினர்.

புலிகளின் தாக்குதலையடுத்து குளித்துக் கொண்டிருந்த படையினர் முகாமை நோக்கி ஓட்டம் எடுத்தனராம். (க-ஸி)

### வாந்திபேதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் வயோதிபர்கள் என 20 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் மானிப்பாய், கைதடிப் பகுதியில் தீவிரமாகப் பரவிவருவதாகவும் ஏனைய இடங்களில் சிறிது சிறிதாக பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸி-)

### முல்லைத்தீவுப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைபவம் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் குழுமியிருந்த இடத்தின்மீது ரொக்கட் தாக்குதலை நடாத்தியது. இத்தாக்குதலில் அந்த இடத்திலேயே 13 பொது மக்கள் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இத் தாக்குதலில் உயிரிழந்த பொது மக்கள் விபரம் வருமாறு:

யோககுமார் அன்ரனிதாஸ் (வயது 29 பாலைக்குடியிருப்பு) மரியதாஸ் அன்ரன் யோகதாஸ் (வயது 30 முள்ளியவளை), தியாகராசா கண்ணன் (வயது 16 ஆனந்தபுரம்) இம்மனுவேல் ஆனந்தராசா (வயது 19 இரணைப்பாலை), சந்திரலிங்கம் பிரேந்திரன் (வயது 15 மாதங்கள்), பிரான்சிஸ் அருள்தாஸ் (வயது 23 அம்பலவன் பொக்கணை), பிண்டிகிரேஸ் யோசப் (வயது 31 புதுக்குடியிருப்பு), சதாசிவம் கண்ணுத்துரை வயது 24 அம்பலவன் பொக்கணை, சபாத்தா திலீப்பேரி (வயது 09 சிறுமி அந்தோனி பார்போவிலடிபுதுமாத்தலன்) சின்னப்பு அல்போன்ஸ் (வயது 21 வலைஞன்மடம், முள்ளிவாய்க்கால்), முத்தையா துரைசிங்கம் (வயது 45-[illegible]) தம்பிராசா குணசீலன் (வயது- 18 புதுக்குடியிருப்பு), பரமானந்தன் (வயது-40) ஆசிரியர் - அல்வாய் வடக்கு.

இத்தாக்குதலின்போது உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-க-ஸி)

### சிலாபத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்ட அச்சத்தை தெரிவித்தனர்.

இது தொடர்பான உடன்பாட்டை அரசு வெளியிட வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரியுள்ளனர் இத்திட்டத்தின் மூலம் அமெரிக்கா இராணுவ தலையீட்டை ஏற்படுத்த முயல்வதாகவும் பலரும் குறை கூறியுள்ளனர். (ஸி)

### அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையில் ஈடுபடுபவர்கள் மேலைநாட்டுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். இது அமெரிக்காவின் காலனியின் ஒரு பகுதி என்கிறார்கள். இது பழமையான ஒய்ந்துபோன இடதுசாரி வாதமாகும்.

இது அமெரிக்காவுக்கு காட்டும் எதிர்ப்பல்லமேற்குலகுக்கு காட்டும் எதிர்ப்பாகும். பல ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட இந்த வானொலி நிலைய ஒப்பந்தத்தினால் இலங்கைதான் நன்மை அடையும். அத்தோடு இந்தஇடத்துக்காக 40,000 அமெரிக்க டொலர் கொடுக்கப்படுகிறது. இந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும். அத்தோடு இந்த இடம் வளர்ச்சி அடையும்.

இலங்கையில் இருந்துகடந்த 40 ஆண்டுகளாக 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பி வருகிறது. அப்படி இருக்கையில் ஏன் இந்த எதிர்ப்பு' என்றார் அமெரிக்க பிரதிதூதுவர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Numbcr B/10 336/B: